வாக்குமூலம்

உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், மாதவரம்.

வழக்கு எண். CC 11/2019

வழக்கு சாட்சி LW6 /PW7

| பெயர் | ரமேஷ் | ஜாதி | |
|---|---|---|---|
| கணவர்/தந்தை | மணி | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | 35 |

தேதி 13.02.2025

எதிரி ஆஜர்.

சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.

**முதல் விசாரணை**

நான் மாத்தூர் பகுதியில் வசித்து வருகிறேன். நான் ஐடி கம்பெனியில் டிரைவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 20.06.2015 அன்று பகல் 12.30 மணிக்கு நான் ஆசிரியர் காவனி வழியாக சென்று கொண்டிருந்தபோது, அங்கு போலீசார் சுஜித்ரா என்பவரை விசாரித்து கொண்டு இருந்தார்கள். அப்போது அங்கிருந்த உதவி ஆய்வாளர் சுஜித்ரா பணம், நகைகளை தாரணி என்பவரிடம் இருந்து வாங்கியதாக கூறினார்கள். விசாரித்தற்கு என்னிடம் சாட்சி கையொப்பம் கேட்டார்கள். தற்போது ஒப்புதல் வாக்குமூலத்தில் காட்டப்படும் முதலாவது கையொப்பம் என்னுடையதுதான். மேற்படி கையொப்பமானது அ.சா.ஆ. 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஆஜர் எதிரிதான் போலீசார் அன்று விசாரித்த சுஜித்ரா என்பவர். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

நான் எந்த முகவரியில் வசித்து வருகிறேன் என்றால் மாத்தூர் பகுதியில். என்ன வேலை என்றால் டிரைவர். என்ன வண்டி என்றால் இன்னோவா கார். நான் எங்கிருந்து எங்கு சென்றேன் என்றால் நான் பாடியில் இருந்து ரெட்டேரிக்கு சென்றேன். எனது கம்பெனி எங்கு உள்ளது என்றால் அம்பத்தூர். அம்பத்தூருக்கு நான் எந்த வழியாக செல்வேன் என்றால் எனக்கு 10 பிக்கப் பாயின்ட் உள்ளது. கொரட்டூரில் ஏற்றிக்கொண்டு அம்பத்தூருக்கு செல்வேன். நான் எத்தனை மணிக்கு அழைத்து செல்வேன் என்றால் 3 மணிக்கு. நான் வேலையில் இருக்கும்போது எவ்வாறு சம்பவத்தினை பர்ர்த்தேன் என்றால் கூட்டமாக இருந்ததால் இறங்கி சென்று பார்த்தேன். அங்கு யார்யார் இருந்தார்கள் என்றால் உதவி ஆய்வாளர், ஒரு போலீசார், தாரணி, சுஜித்ரா. அங்கு நான் என்ன செய்தேன் என்றால் வேடிக்கை பார்த்தேன். சாட்சி கையொப்பம் கேட்டார்கள். செய்து கொடுத்தேன். நான் கையொப்பம் செய்ததில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எனக்கு வழக்கை பற்றி எதுவும் தெரியாது என்றாலும், போலீசார் கேட்டுக்கொண்டதால் காவல் நிலையத்தில் கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல. போலீசார் கேட்டுக்கொண்டதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**